## ஸ்டுட்கார்ட் தமிழ்ச்சங்கத்தின்

# நட்பேடு

மாதாந்திர இதழ் - சித்திரை மடல் - சுபகிருது - 2022

# உள்ளுறை

03 ஆசிரியர் மடல்

04 நற்செய்தி

05 இந்தியத் தூதரகச் செய்திகள்

06 துணையெழுத்து

- கட்டுப்பாட்டுடன் கூடிய அன்பு
- வானம் வசப்படும்!
- அணையா விளக்கு
- Shelter search in Germany
- சாதாரண கேள்வியும் அசாதாரண பதிலும்
- DIY Lippan Art
- ஹைக்கூ

13 கீற்றல்கள்

16 தமிழோடு விளையாடு

19 நிழற்பதிவு

20 சங்க நிகழ்வுகள்

23 இலக்கண கலக்கம்

26 இறுதியல்ல, நிறைவு



நமது நட்பேட்டில் உள்ள போட்டிகளுக்கான விடைகளை stsnatpedu@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு பிரதி மாதம் 15ம் தேதிக்குள் அனுப்பி வைக்கவும். சரியான பதிலளிக்கும் வாசகர்கள் பெயர்கள் அடுத்த மாத இதழில் வெளியிடப்படும்

# ஆசிரியர் மடல்

எண்ணங்கள் ஒரு சேர ஒன்றிணைந்தோம் சங்கமாய்,
நம் எழுத்துக்கள் ஒரு சேர பதிந்தெழுந்தது நம்மில் ஓர் அங்கமாய்,
நம் நட்பேடு.

சற்றொப்ப 56 விழுக்காடு ஆதரவுடன் பெயர் சூட்டப்பட்டு,
காரணப்பெயருக்கான முழுப் பொருளுடன் ஒவ்வொரு திங்களும்,
தங்களைத் திகைக்க வைப்பதற்கான இணையவலம் இனிதே
துவங்குகிறது.

அறம், ஆருடம், இயல், ஈகை, உரைநடைதொட்டு ஓவியம் வரை
படைத்தளிக்க நம் நண்பர் படை இருக்க, எடுத்துவரும் பாத்திரமாய்
தொடரப்போகிறது நட்பேடு.

பாரதியின் வாக்கிற்கேற்ப, கலைச்செல்வங்களைக் கொணர நம்
தாய்மொழியுடன் நம்மை பிற கலாச்சாரங்களுடன் இணைத்து,
இன்றும் வாழ வழி செய்துகொண்டிருக்கும் ஆங்கிலம் மற்றும்
டாயிட்சு மொழிகளை பெருமையுடன் தாங்கி நகரப் போகிறது.

இந்தத் தருணத்தில் நம் நட்பேட்டின் முதல் பிரதி வெளிவரக்
காரணமாய் இருந்த ஒவ்வொரு நண்பருக்கும், இனி வரப்போகும்
பிரதிகளுக்குத் துணை நிற்கப்போகும் அன்பர்களுக்கும் நட்பேடு குழு
சார்பாக வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

நம் நட்பேட்டின் ஒவ்வொரு பரிமாணத்திலும், வாசர்களாகிய உங்களின்
பங்களிப்பு இன்றியமையாதது . தங்களின் படைப்புகளையும்
கருத்துகளையும் நம் நட்பேடு குழுவிற்கு மின்னஞ்சலில்
(stsnatpedu@gmail.com) பகிருமாறு தாழ்மையுடன்
கேட்டுக்கொள்கிறோம். தங்களின் கருத்துகள் நம் குழுவிற்கு மிகுந்த
உத்வேகத்தைத் தரும் என்பது திண்ணம்.

வாசகர்கள் அனைவருக்கும் சுபகிருது வருட நல்வாழ்த்துகள் !

**நட்பேடு ஆசிரியர் குழு**
சுந்தரராமவிக்னேஷ் நாகராஜன் - ஆசிரியர்
கார்த்திக் நம்பி - பதிப்பாசிரியர்
மெய்யரசு நடராஜன் - இணையாசிரியர்

# குறள் பேசும் பாடம்

முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு

பார்க்கும்போது மனம் மகிழாமல் , முகம் மட்டும் மலரப் பழகுவது நட்பு அன்று. அன்பால் மனமும் மலரப் பழகுவதே நட்பு.

- சாலமன் பாப்பையா விளக்கம்

# நற்செய்தி



நாயி நரி பூனைக்கும் தான் இந்த ஏரி குளம் கூட சொந்தமடி!!!

இந்தப் பாட்டைக் கேட்டவர்கள் பல கோடி , சரியாக பாடுபவர்கள் சில கோடி, பொருளுக்கேற்ப வாழ்பவர்கள்? நிச்சயம் பூஜ்யம் அல்ல; நான் இருக்கிறேன் என்கிறார் புதுப்பாளையத்தைச் சேர்ந்த இயற்கை விவசாயி திரு. குருசாமி அவர்கள்

ஒரு அழகிய மாலை வேலையில் தனது ஆட்டுக் குட்டிகளுடன் ஒரு சில மான்கள் தனது மேய்ச்சல் நிலத்தில் இளைப்பாறுவதைக் கண்ட ஐயா குருசாமி, அவற்றை விரட்ட மனமில்லாமல் அவற்றுக்கான சூழலில் பாதுகாத்து வந்தார்

1998 ம் ஆண்டுதொட்டு தனது 70 ஏக்கர் விவசாய நிலத்தில், 3 மான்களுக்கு அடைக்கலம் கொடுத்த அய்யா குருசாமி, தற்பொழுது தனது 70 ஏக்கர் நிலத்தில் 50 ஏக்கர்களை சுமார் 1800 மான்களுக்கு புகலிடமாக்கியுள்ளார். தற்போது வெறும் 10 ஏக்கர் நிலத்தில் தன் வாழ்க்கையை நடத்தி வருகிறார்

மாற்றுக்கருத்துடைய விவசாய நண்பர்கள் முதல் கடத்தல்காரர்கள் வரை எந்த ஒரு ஆபத்தும் மான்களை நெருங்காமல் ஒவ்வொரு நொடியும் காவல் காத்து வருகிறார்.

இப்படிப்பட்ட எண்ணம் கொண்ட ஒவ்வொருவரின் உள்ளமும் நம் நாளைய சமுதாயத்திற்கு விதைக்கல் என்பதில் ஐயமில்லை.

Courtesy : https://www.thebetterindia.com/265515/gurusamy-tamil-nadu-farmer-ancestral-land-deer-population-conservation-inspiring/

நண்பர்களுக்கு ஓர் எச்சரிக்கை!!!

# இந்தியத் தூதரகச் செய்திகள்

Consulate General of India Munich ****

Date: 22 April 2022

Advisory on Fraud Calls/E-mails

1. It has come to the notice of this Consulate that some Indian nationals residing in the jurisdiction of this Consulate have received fraud calls from spoofed numbers or fraud emails sent from forged sender addresses.
2. The fraudsters claim to be officials of the Indian Embassy/Consulate or of the German Immigration/KVR/Behorde Authorities. These fraudsters misguide people through different means inter alia stating that they have not registered themselves with German Immigration Authorities or have not submitted/filled immigration related forms correctly and are now liable to pay penalty or otherwise it may result in legal proceedings against them including imprisonment etc. In some cases gullible Indian nationals have paid/transferred money to such callers immediately and later realized that these were fake calls.
3. Indian diaspora/community members are advised not to be carried away by such calls and report the matter immediately to local police. They are also advised to keep this Consulate informed of such calls by sending an email at cons.munich@mea.gov.in.

https://cgimunich.gov.in/public_files/assets/pdf/Advisory_reg_fake_calls_22_April_2022.pdf

# துணையெழுத்து

## கட்டுப்பாட்டுடன் கூடிய அன்பு



**கூட்டுக் குடும்பம் :**

கூட்டுக் குடும்ப வாழ்க்கை என்பது ஒரு வரப்பிரசாதம். கூட்டுக் குடும்பம் என்பது தாத்தா, பாட்டி, சித்தி, சித்தப்பா, அத்தை என் று பெரிய குடும்பம். பெரிய வீடு, கோழிகள், பூனை என்று ஐந்தறிவு நண்பர்கள் இருப்பார்கள். பாசத்துடன் ஊட்டி விடும் சித்தி, விதவிதமான கதைகள் சொல்லும் பாட்டி, பள்ளியில் இருந்து வந்த உடனே, அப்போதுதான் முதல் முறை பார்ப்பதுபோல் கட்டி அணைத்து முத்தம் கொடுக்கும் அம்மா, அத்தை, என்ன படிக்க வேண்டும் என்று ஆலோசித்து நம்மை நல்லவழிக்கு அழைத்துச் செல்லும் அப்பா, பெரியப்பா மற்றும் சித்தப்பா என்று அழகான வாழ்க்கை. அந்த வாழ்க்கையில் அன்புகொட்டிக் கிடக்கும். அது மட்டுமல்லாமல் ஒவ்வொருவருக்கும், 'தான் ஒரு பெரிய குடும்பத்தில் இருக்கிறோம், நம்மால் குடும்பத்தின் பெயர் கெட்டுப் போய் விடக் கூடாது' என் று ஒரு பய உணர்வு இருக்கும். அதனால் பெரிதாக எந்தத் தவறும் நடக்காது. அத்தனை பேருடைய கண்காணிப்பில் வளர்கிற காரணத்தினால், குழந்தைகள் படிப்பிலும், பொது அறிவிலும் சிறந்து விளங்குவார்கள்.



இன்றைக்கு அந்த அழகான கூட்டுக் குடும்ப வாழ்க்கை நடைமுறையில் இல்லை. அதனால் குழந்தைகள் கட்டுப்பாடில்லாமல் வளர வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகளுக்கு நியாயமான சில சட்ட திட்டங்களைக் கற்றுக் கொடுத்து, அவற்றுக்குக் கீழ்ப்படிய பயிற்சியும் கொடுக்கவேண்டும். பிள்ளைகள் பொறுப்புள்ளவர்களாக வளர வேண்டும் என்றால் இப்போதே அவர்களை சில கட்டுப்பாடுகளுடன் வளர்க்க வேண்டும். கட்டுப்பாடு இல்லாத பிள்ளைகள் நங்கூரம் இல்லாத கப்பல் மாதிரி கொஞ்சம் கொஞ்சமாக திசைமாறிப் போய்விடுவார்கள்.

அதனால் வளர்கிற காலத்தில் கண்டிப்பு மிகவும் அவசியமான ஒன் று.அடியாத பிள்ளை படியாது 'அடி உதவுவது போல் அண்ணன் தம்பிகூட உதவ மாட்டார்' என்கின் ற பழமொழிகள் குழந்தைகளை கண்டித்து வளர்ப்பதன் அவசியத்தை வலியுறுத் துகின்றன.

**கட்டுப்பாடான குடும்பம் :**

அந்த வககயில் சித்தா குடும்பத்தில் எங்களுக்கென்று சில கடமைகளும் கட்டுப்பாடுகளும் இருக்கின்றன. அதை நிறைவேற்றினால் மட்டுமே உறுப்பினராக இருப்பதற்கான தகுதியைக்கொடுப்பார்கள். அப்போதுதான் நம் வார்த்தைகளுக்கும் மதிப்பு இருக்கும்.

தொடரும்..,

Author : சுரேஷ் சுப்ரமண்யா

# வானம் வசப்படும்!




இந்த உலகில் தோன்றிய மொழிகளில் மூத்தோர்க்கு மூத்தாள்; இளையோருக்கு இளையாள்; என்றும் நம் நெஞ்சிலும் நாவிலும் நிலைக்க நான் விளையும் எம் தமிழன்னைக்கு வணக்கம்.
வானம் வசப்படும்!

நிலா நிலா ஓடி வா
நில்லாமல் ஓடி வா
மலை மீது ஏறி வா
மல்லிகைப்பூ கொண்டு வா .........

நண்பர்களே, இந்த பாடல் உங்களுக்கு ஒரு முழு நிலவையும் அழகிய மாலை நேரத்தையும் ஞாபகப்படுத்தினால், உங்கள் குழந்தைப் பருவம் சிறப்பாகவே இருந்திருக்கிறது. வானம் எப்போதும் நம் நண்பனாக உடனிருந்து இருக்கிறது. நிலவும் நட்சத்திரமும் நம் மனதையும் அந்த வானத்தையும் நிறைத்திருந்தன. ஆனால் நாம் வளர்ந்து பெரியவர்கள் ஆனதும் நமக்கும் வானத்திற்குமான நட்பைக் குறைத்துக் கொண்டோம். யோசித்துப் பாருங்கள் கடைசியாக நீங்கள் இரவு நேர வானத்தை ரசித்தது எப்போது?
நம் தனிநபர் நட்பைத் தாண்டி வானத்திற்கும், வானியலுக்கும் தமிழ் நாகரீகத்திற்குமான தொடர்பு அந்த வானத்தைப் போலவே மிக நீண்டது. தமிழ் நாகரீகம், கலிலியோ தொலை நோக்கியைக் கண்டுபிடிப்பதற்கு முன்பே, மேற்கத்திய உலகம் புவி மையக் கோட்பாட்டை நம்பிக் கொண்டிருந்த போதே, 9 கிரகங்களையும் 12 ராசிகளையும் 27 நட்சத்திரங்களையும் உள்ளடக்கி நாளையும் கோளையும் கைக்கொள்ளும் ,கணியர்களை‘ கொண்டிருந்தது.







வானத்தை ரசிப்பது என்பது ஆகன் பல்கலைக்கழகத்தில் *(Aachen University, Germany)* படிக்கும்போது பொழுதுபோக்கிற்காகத் துவங்கியது. விரல் நீட்டி கிரகங்களையும் நட்சத்திரங்களையும் காண்பது தனி ஆனந்தம். அவ்வாறு கண்டவற்றை கேட்டறிந்தவற்றை மற்றும் படித்து தெரிந்தவற்றை உங்களோடு பகிர்ந்து கொள்ளவும் அந்த பகிர்தலுக்காகவே மேலும் படிப்பதற்கும், அறிவதற்கும், தெரிவதற்குமான ஒரு சிறு முயற்சியே இந்த எழுத்து. வாருங்கள், சேர்ந்து பயணப்படுவோம். நாம் சிறுவயதில் தொலைத்த, நமக்கும் வானத்திற்குமான நட்பை சேர்ந்து மீட்டெடுப்போம். வானம் வசப்படும்!

**பாகை-*01*: துருவ நட்சத்திரம்**

வானியல் என்பது கணிதம்; கணிதத்தின் பயன் பொருளாதாரம்; பொருளாதாரத்தின் தேடல் வாணிபம்; வாணிபத்தின் வழி பயணம், அந்தப் பயணத்தின் துணை வானியல்! தமிழ் நாகரிகத்தின் வாணிப வழித்தடங்கள் பெருங்கடல்கள் மேல் அழுத்தமாக படிந்துள்ளன. கரை கடந்த மனிதனுக்கு வானம் மட்டுமே நிரந்தர வழித்துணை. இன்னுமும் நம் கிராமங்களில் சூரியனைப் பார்த்து நேரம் சொல்லும் பெரியோர்கள் உள்ளனர். ஆக, கடலின் வழிகாட்டிகளை மனிதன் வானில் நட்டு வைத்தான். அந்த வழிகாட்டிகளில் முதன்மையானது துருவநட்சத்திரம்.

பயணங்கள் முடிவதில்லை..தொடரும்..,

Author : செ. கார்த்திகேயன்

# அணையா விளக்கு

அடிமைத் தனத்தில் அழுந்தி கிடந்த அன்னையின் கைகள்,
சங்கிலியாய் அழுது வடிந்த அடிமைகளாய்
நம் பாரத தாயின் புதல்வர்கள்,
அன்னை புத்திலிபாயில் கருவெடுத்து அந்நியனை விரட்ட உருவெடுத்து
வெள்ளையனே வெளியேறு!!
செய் அல்லது செத்து மடி!!
என்று செப்பிட்ட அன்புநெறி அரையாடை வேந்தனே!!

கடவுளே உண்மையென்றாய்,
உண்மையுணர்ந்து உண்மையே கடவுளென்றாய்,
மாறாத அகிம்சையே ஆக்கமென்றாய்,
அயராது சத்தியவழி சோதனை கண்டாய்,
அண்ணலே நாட்டிற்கு நல்வழி காட்டிய நீ
வன்முறைக்கு இரையாகி போனாயே,
அமைதிக்கு அர்த்தமளித்த மகாத்மாவே நீ
ஒழுக்க வாழ்வின் அணையா ஒளிவிளக்கே!!




Author : கிருபாகரன் குமார விஜயன்





# Shelter search in Germany - Part 1

Germany is quite an attractive real estate market that some of us choose to buy our own property here. Many of you might already know these things have changed a little more since covid, and I think many people have decided they want to have their homes in Germany. However, rental prices are high now that it almost makes sense to purchase a property.

I will explain this in different stages every month, like finding a smart property, financing that property, how to contact the property owner in the right way, and the property handover.

The first step is finding a property- before start finding, it is always better to set your requirements with weightage. It's almost impossible to get a property with all your wishes satisfied most of the time. The primary part of the wish list is the property type and size of property required.

For example: Apartment (Wohnung), Multifamily house (Mehrfamilienhaus), Rowhouse (ReihenHaus), a Semi-detached house (Doppelhaushälfte), Single-family house ( Familienhaus) and Villa (Villa). Typically more than one choice always helps to reduce the house-hunting process. After deciding the property types and size, we need to extend the requirements with weightage to other parameters like location, commute to office/school/supermarkets/hobby/fitness, etc. Once the wish list is ready with appropriate weightage points, the actual finding of a property begins.

Contd...

Author : Santhosh Kumar Panneerselvam

## சாதாரண கேள்வியும் அசாதாரண பதிலும் :



அப்துல் கலாம் அய்யா : ஐஸ்வர்யா ராய் ஏன் உலக அழகியாக தேர்ந்தெடுக்கப்பட்டார் ?


ஒரு சிறுமி : ஏனெனில் நான் அந்த போட்டியில் கலந்துகொள்ளவில்லை !

(அப்துல் கலாம் அய்யா அவர்கள் அந்த சிறுமியின் தன்னம்பிக்கையை வெகுவாகப் பாராட்டி , இதுவே மிகச் சிறந்த பதில் என்று சொன்னார் )

படித்தது : மெய்யரசு நடராஜன்

# வாசகர் மடல்

பார்த்துப் பார்த்து கண்கள் பூத்திருப்பேன்..,
நீ வருவாய் என !!!




நமது நட்பேடு குறித்த உங்கள் கருத்துகளை stsnatpedu@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு பிரதி மாதம் 15ம் தேதிக்குள் அனுப்பி வைக்கவும். உங்கள் மடல்கள் நமது "வாசகர் மடல் " பகுதியில் வெளியிடப்படும் !

# DIY Lippan Art

Lippan Art is a mural tradition from the Kutch region in Gujarat. Lippan art is essentially mud-relief work that incorporates mirrors. It is used to embellish the interior and exterior walls of the huts. Traditionally, Lippan Art uses dough prepared from animal dung and clay bought from the lakes in the Kutch region. The dough is rolled into cylindrical strips and used to make precise patterns on the surface. Large mirrors were shattered using stones, and these small shards were arranged aesthetically to form designs. After the artwork dries, it is coated with white clay or white sand. Lippan takes days to dry and make, as every step is executed by hand.
Nowadays, Lippan Art is done as wall décor with wooden boards made of MDF or cardboard as the base, and the dough is made of chalk powder and Fevicol or Clay. Let's see the materials and steps to create the Lippan art as wall décor.

**Materials needed:**

- Cardboard
- Fevicol
- Mirrors of various shapes
- Chalk powder/baby powder
- Plastic sheet for cone
- Acrylic colours of your choice




**Instruction**:
1. Draw a design on cardboard.
2. Make a paste using chalk/baby powder and Fevicol (1: 0.5) ratio and fill the paste in a plastic cone or piping bag. Generally, thick lines are used for Lippan art. So, cut the mouth of the cone accordingly.
3. Do the cone-work on the drawn design. Let them dry.
4. Once the paste has dried, add colors to it.
5. Glue the mirrors to decorate.
6. You can also first do step 5 before step 4 if you feel convenient with this order.

Now your artwork is ready to decorate your wall.

Author: ஜமுனாவதி சிதம்பரம்

**Step 1:**




**Step 2:**




**Step 3:**



**Step 4:**



**Step 5:**



Courtesy: STS Tamil School




# ஹைக்கூ


"You will never be free unless you get down from that abandoned tree"

Meaning : if you wish to come out of your sorrow , loneliness etc, you need to come out of your shell and mingle with others

Author -Hariharan Meyyarasu



# கீற்றல்கள்



# Art In Hand

By Anusha Karthik
Mehandi Design

Courtesy: STS Tamil School



# Swing through the Forest

By Guruprasanth Meyyarasu

Sketch

Courtesy: STS Tamil School

# All Colors R Beautiful

By Visalya Arnkumar

Sketch



# தமிழோடு விளையாடு

1.பூமியிலே பிறக்கும், புகையாய்ப் போகும்.
- அது என்ன?

2.இரு கொம்புகள் உண்டு மாடு அல்ல, வேகமாய் ஓடும் மான் அல்ல, கால்கள் உண்டு மனிதனல்ல.
– அது என்ன?

Author - விவர்தனா அருண்குமார்

Courtesy: STS Tamil School



## வினா விடை

1) Apart from Sachin, Dhoni, Virat, and Rohit , there is only ONE Cricketer to receive India's highest sports felicitation- Khel Ratna Award. Who is that?

2) ''வெற்றி நடை போடுகிறது''- Which producer first introduced this statement on Cinema posters?

3) After 6 CM's resignation - famously known as the 'Kamaraj Plan. Who became the Prime Minister of India?


4) Which country has the oldest flag (created in 1219) as its National Flag till today?

5) Which country other than India holds Lotus as National Flower?

Author - விஷ்வாஸ் ரூபன் ராஜ்



# குறுக்கெழுத்துப்போட்டி






**இடமிருந்து வலம்**

1. ஆகஸ்ட் மாதம் கொண்டாடப்படும் தேசிய தினம் .
12. கொல்லன் என்றும் சொல்லலாம் .
14. தீக்குச்சியை இந்த குச்சி என்றும் சொல்லலாம் .
16.இது இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் .
19. ஒரு தானியம் .
21. காமராஜரின் அடைமொழிகளில் இது ஒன்று .

**கீழிருந்து மேல்**

3. அரை .
4. தேசப்பிதா என்று அழைக்கப்படுபவரின் பெயரின் பின்பாதி .
10. போலீஸ்காரரின் கையில் இருப்பது .
13. சேலத்தை நினைவுபடுத்தும் இந்த பழம் .
14. பக்கிம் சந்திர சாட்டர்ஜி பாடிய ஒரு தேசிய பாடல் .
19. ஆண்கள் காதில் அணிந்து கொள்வது .
20. இது நமக்கு பகை .
22. தங்க தேரோடும் ------யிலே .
23. விலையுர்ந்த கல் ஒன்று -----தினம் .

**மேலிருந்து கீழ்**

1.ஆணி அடிப்பதற்கு பயன்படுவது . கடைசி எழுத்து இல்லை .
2. இந்தியதாய்
9. துப்பாக்கி ஆங்கிலத்தில்
11. சொந்தக்காரர் .
15. இந்தியாவின் விடுதலைக்கு போராடியவர்களுள் இவரும் ஒருவர் பாலகங்காதர --------.

**வலமிருந்து இடம்**

4. ஒரு ராகம் .
5. யானையிடம் உள்ள இதற்காகத்தான் அதை வேட்டையாடுகிறார்கள் .
6. தீபத்தில் எரியும் நெருப்பு .
7. தானம் கொடுத்த மாட்டை “இது “ பிடித்து பார்க்கலாமா ?.
8. பூக்களிலிருந்து தேனீக்கள் சேகரிப்பது .
11. இது உருண்டையாம் .
17. தலைமுடி வேறு சொல் .
18. காய் , பழம் ஆகியவற்றை வெட்ட பயன்படுவது .

Author - புவனேஸ்வரி சோமசுந்தரம்

நிழற்பதிவு



# பிரதிபலிப்பு

ஒளி ஓவியம்: சிவகுமார் முருகேசன்

காட்சி : கோடை வெயிலின் வெப்பத்தை தணித்து, குளத்தில் தன்னழகு கண்டு வியக்கும் சிட்டுக்குருவி.

எங்கு : பெர்லின் உயிரியல் பூங்கா, ஜெர்மனி.

எப்பொழுது : கோடை 2019

எவ்வாறு : கேனான் 1300D, 55-250mm @250mm.

குறிப்பு:
விலங்கினங்கள் மற்றும் பறவைகளை பதிவுசெய்ய, ஷட்டர் வேகத்தை அதிகப்படுத்தவும்; ISO எனப்படும் உணர்திறனை அதிகப்படுத்தவும்

இந்த இதழ் பிரதிபலிப்பு உங்கள் எண்ணத்தில் ஒரு கவிதையையோ அல்லது நல்ல சொற்றொடரையோ நினைவுபடுத்தினால் எங்களுக்கு என்ற மின்னஞ்சலில் அனுப்பி வைக்கவும் !!!

# சங்க நிகழ்வுகள்



## சிறகடித்த பட்டாம்பூச்சிகள்

Kids day out

Wilhelma zoo

April 15 2022

# வெயிலோடு விளையாடி ...
# வெயிலோடு உறவாடி ...



## Boys day out

Bamberg

July 1-3 2022

## Girls day out

Majorca

April 30- May 3 2022

# பிறந்தநாள் வாழ்த்துகள் !!!

நீண்ட நீண்ட காலம்,
நீ நீடு வாழ வேண்டும்,
வானம் தீண்டும் தூரம்,
நீ வளர்ந்து வாழ வேண்டும் ....

1. Natarajan Meyyarasu
2. Karthikeyan Senthiappan
3. Santhosh Balaji Marimuthu
4. Selvaraj Ponnusamy
5. Sangeetha Selvaraj
6. Sanjay Santhosh Kumar
7. Shankar Barathi
8. Manimala Venkatesh
9. Lalit Kaushik Venkatesh
10. Ramkumar Ramamoorthy



# இலக்கண கலக்கம்

“வீட்ல இருந்து கொண்டு வந்த தாளிச்ச தயிர் சாதத்தை சாப்டுட்டு, மைதானத்துல ஓடி ஆடி விளையாடிட்டு, மணி அடிச்சதும் அடிச்சு புடிச்சு வகுப்பறைல நம்ம இடம் எங்கன்னு தேடி வந்து, அப்பாடான்னு உட்கார்ந்தா .... ஒரு மனுஷன் இன்னைக்கி இலக்கணவகுப்புன்னு ஒரு புத்தகத்தை தூக்கிட்டு வந்து நிப்பாரு... எப்புடி இருக்கும் ???” அப்படின்னு நம்ம ராகுல் தாத்தா அவரோட பேரன் சேரலாதன் (வயது 16) கிட்ட லைட்டா பேச்சு குடுத்தாரு...,

**சேரலாதன்**: இரு இரு இரு.. நான் பேசவேண்டியதெல்லாம் நீ பேசிட்டுருக்கே? எப்படியும் இந்த lead க்கு பின்னால ஒரு topic வெச்சிருப்பியே!.. straight ஆ matter க்கு வா தாத்தா.

**Rahul தாத்தா:** உனக்கு இன்னைக்கி இருக்கற கஷ்டங்கள் எங்களுக்கும் இருந்துச்சுப்பா.. ஆனாலும், அதையும் தாண்டி நம்ம செய்யறத சரியா செய்யணும்ங்கற உத்வேகம் நமக்குள்ள இருக்கனும் இல்லையா.. உதாரணத்துக்கு, நீங்க படிக்கற முறையை எடுத்துக்கோ.., பல விஷயங்கள் இன்னைக்கி இருக்கற மாணவர்களுக்கு சரியா கொண்டுபோய் சேர்க்கப் படல... நீங்களும் எங்க அளவுக்கு அக்கறை எடுத்துக்கல



**சேரலாதன்**: ஓஹோ அதென்ன உங்க அளவுக்கு? அப்படி எப்படி படிச்சீங்க நீங்க? எங்க சொல்லு கேபோம். நானும் try பண்றேன்.

**Rahul தாத்தா**: உதாரணத்துக்கு சொல்லணும்னா.. நாங்கல்லாம் பெரிய „ற“, சின்ன „ர“ ன்னெல்லாம் சொல்ல மாட்டோம். அதெல்லாம் உங்க சௌகரியத்துக்கு நீங்க மாத்திகிட்டது. வெள்ளகாரன் „உதகமண்டலம் “ங்கற ஊரு பேர, "ஊட்டி"னு மாத்துனத போல

**சேரலாதன்**: தாத்தா, எதுவா இருந்தாலும் கொஞ்சம் ஈஸியா புரியற மாரி சொல்லு... அப்போ தான் நீ இன்னைக்கி field ல நிக்க முடியும்.

**Rahul தாத்தா**: இங்க பிரச்னையே இந்த சுலபம் தான்.. இதுக்காக என்னென்னத்தையெல்லாம் மாத்திவெச்சுருக்காங்க தெரியுமா.. நீ பெரிய „ற“ னு சொல்றதுக்கு பேரு வல்லின றகரம். நீ சின்ன „ர“ னு சொல்றதுக்கு பேரு இடையின ரகரம்

**சேரலாதன்**: தாத்தா, நிப்பாட்டு. Opening ஏ உதறுதே. இவ்ளோ கஷ்டமா இருந்தா எப்படி ஞாபகம் வெச்சுக்கறது? இதனால தான் நாங்க Shortcut வெச்சுக்கறோம்

# இலக்கண கலக்கம்

**Rahul தாத்தா:** Shortcut வெச்சுக்கலாம் தம்பி.. ஆனா நீ வெச்சுக்கற Shortcut எல்லாம் வேற ஊருக்கில்ல கூட்டிட்டு போகுது. பாதையே மாறுதே.

**சேரலாதன்:** சரி இப்போ என்ன? உனக்கு வேற Shortcut தெரியும்.. அதானே? கேக்கலைன்னா விட மாட்ட... சொல்லு

**Rahul தாத்தா:** நம்ம தமிழ் காவியங்கள்ல, ஒரு தலைவன் தலைவிய வர்ணிக்கறப்ப.. “கொடியிடையாள்”-னு சொல்லுவான்

**சேரலாதன்**: தாத்தா !!!!!!!!!!

**Rahul தாத்தா:** அட இருப்பா.. அவசரப்படாத.. பொதுவா.. கொடிங்கறது அகலத்துல செடியை விடவும் சின்னதா இருக்கும்.. அதே போல இடையும் சின்னதுன்னு வெச்சுக்குவோம். இடை சின்னதா இருக்கறத போல இடையின ரகரமும் சின்னதா இருக்குன்னு ஞாபகம் வெச்சுக்கலாமே..
இப்படி செய்தா, எது இடையின ரகரம்ங்கறத சரியாய் ஞாபகம் வெச்சுக்கறதோட, அதுக்கான விதியையும் சரியா சிரமம் இல்லாம பயன்படுத்தலாமே. இதுக்கு மேல என்ன Shortcut வேணும் உனக்கு??

**சேரலாதன்**: எங்க நீ வேற ஊருக்கு கூட்டிட்டு போய்டுவியோன்னு பார்த்தேன் .. பரவாயில்லை சரியாத்தான் கூட்டிட்டு போற.... மேல சொல்லு

- அடுத்த ஏட்டில் தொடரும்.

Author : சுந்தரராம விக்னேஷ்





# இறுதியல்ல, நிறைவு

பெயர் தெரியாத அல்லது முகம் அறியாத நபர்களுக்கு நாம் செய்யும் உதவி அல்லது அவர்கள் நமக்குச் செய்யும் உதவிகள் நம் வாழ்வில் மறக்கமுடியாத அனுபவங்களாக இருக்கும் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அது போன்ற ஒன்றை நானும் அனுபவித்துள்ளேன்.

அது ஒரு வார விடுமுறை நாள். ஒரு மாணவியாக ஜெர்மனியில் எனது வாழ்வில், ஒவ்வொரு பைசாவையும் பார்த்துப் பார்த்துச் செலவு செய்து வந்த காலம். வாரம் இருமுறை செலவினங்களை சரி பார்த்துக் கொள்வேன்.

அன்று நான் எனக்குத் தேவையான பொருட்களை பல்பொருள் அங்காடியில் இருந்து எடுத்துக்கொண்டு பணம் செலுத்தக் காத்திருந்தேன்.

எனது முறை வந்ததும், ஊழியர் எனது பொருட்களைச் சரி பார்த்தபின் அவற்றை நான் எனது பையில் போட்டுக்கொண்டேன். வாங்கிய பொருட்களுக்கு நான் டெபிட் கார்டு மூலம் பணம் செலுத்த முற்பட்டபோது, அவர்களின் தொழில்நுட்பக் காரணங்களால் எனது கார்டை பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டது. நான் எடுத்த பொருட்களைத் திரும்ப வைக்க முற்பட்டபோது, ஒரு ஜெர்மானியர் தானாக முன்வந்து எனக்கான பணத்தை செலுத்திவிட்டு ஒரு புன்னகையுடன் விருட்டென சென்றுவிட்டார்.

நான் அவரை பின்தொடர்ந்து சென்று அவருக்கு நன்றி கூற முயன்றேன். ஆனால் அவரின் வேகத்திற்கு என்னால் ஈடு கொடுக்க முடியவில்லை. அன்று அவர் செய்த உதவி எனக்குப் பணம் கொடுத்தது மட்டுமல்லாமல் வாய்ப்பு கிடைக்கும்போது நானும் இவ்வாறு யாருக்கேனும் உதவ வேண்டும் என்ற எண்ணத்தை என் மனதுள் ஆழப் பதித்துவிட்டது.



இன்று நம் நட்பேடு இதழ் வாயிலாக அந்தப் பெயர் தெரியாத நண்பருக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்

Author : ஸ்வேதா  முரளிகிருஷ்ணா